මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, නො.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல : LAE/2025/01** **2025.03.03**

# உள்ளூரதிகார சபைகள் தேர்தல் - 2025

## பெயர் குறித்த நியமனங்களைக் கையேற்றல்

நடாத்தப்படவிருக்கும் 336 உள்ளூரதிகார சபைகளுக்கான (அம்பாறை மாவட்டத்தில் கல்முனை மாநகர சபை மற்றம் தெஹியத்தகண்டிய பிரதேச சபை, மன்னார் மாவட்டத்தில் மன்னார் பிரதேச சபை, கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேச சபை, காலி மாவட்டத்தில் எல்பிட்டிய பிரதேச சபை தவிர்ந்த) அதாவது 28 மாநகர சபைகள், 36 நகர சபைகள், 272 பிரதேச சபைகள் ஆகியவற்றிற்கு மாநகர முதல்வர்கள், பிரதி மாநகர முதல்வர்கள், தவிசாளர்கள், பிரதி தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக பெயர்குறித்த நியமனப் பத்திரங்கள் கையேற்பது பற்றிய அறிவித்தல் ஏற்கெனவே குறித்த உள்ளூரதிகார சபைகளில் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளன.

அதன் பிரகாரம், **தேர்தலுக்கான வைப்புப் பணம் கையேற்கும் நடவடிக்கைகள், 2025 மார்ச் மாதம் 03 ஆம் திகதியிலிருந்து 2025 மார்ச் மாதம் 19 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை (இக்காலகட்டத்தின் இடையிலே வரும் 2025 மார்ச் 13 ஆம் திகதி போயா தினம், 2025 மார்ச் 08, 09 ஆம் மற்றும் 15, 16 ஆம் சனி, ஞாயிறு தினங்கள் தவிர்ந்த) இடம்பெறுமெனவும், பெயர் குறித்த நியமனங்களைக் கையேற்கும் நடவடிக்கைகள் 2025 மார்ச் மாதம் 17 ஆம் திகதியிலிருந்து 2025 மார்ச் மாதம் 19 ஆம் திகதி வரை மு.ப. 8.30 மணி தொடக்கம் பி.ப. 4.15 மணி வரை மற்றும் 2025 மார்ச் 20 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை அந்தந்த மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர், மாவட்டச் செயலாளர் / அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இடம்பெறுமெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.**

ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு
(தேர்தல் ஆணைக்குழுவுக்காக)